188--

சிவகாசியில் சிட்கோ மூலம் பனியன் தொழிற்சாலை அமைத்தல்.

*21257-**திரு. ஜெ. பாலகங்காதரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிட்கோ தொழிற்பேட்டை மூலம் சிவகாசியில் பனியன் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய வேண்டுகோளின்படி மத்திய அரசு கலால் வரியை குறைத்துக்கொண்டிருந்த போதிலும், இந்த ஆண்டு மத்திய அரசானது தீப்பெட்டி மற்றும் அச்சுத் தொழிலுக்கு மிக அதிகமாக கலால் வரி விதித்து, அந்தத் தொழில்கள் நசிந்து போகிற சூழ்நிலையில், இன்றையதினம் வேறு தொழில்களுக்கு அங்கேயிருக்கிற தொழில் முனைவோரும், தொழிலாளர்களும் செல்ல விரும்புகிறார்கள். எனவே, அங்கேயிருக்கிற ஒரு லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற சூழ்நிலையில், இன்றையதினம் வேறு நல்ல தொழிலாக இருக்கிற பனியன் தொழிற்சாலையை சிட்கோ மூலமாக சிவகாசியில் ஆரம்பிக்க வேண்டுமென்று இந்தக் கேள்வியை கேட்டேன். அதற்குத் தனியார் யாரும் முன்வந்தால்-50 தனியார் தொழில் முனைவோர் முன் வருகிறார்கள்-நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் சிவகாசியில் பனியன் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல 50 பேர் 25% விளிம்புத் தொகையுடன் முன்வந்தால் அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசானது சாதனைகள் மேல் சாதனை செய்து வருகிறது என்பதற்கு ஒரு நல்ல உதாரணமாக இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல

1994 ஏப்ரல் 5]

பதிலைச் சொல்லி இருக்கிறார்கள். அதைப்போல அந்தத் தொழில் பேட்டை தொடங்க இந்த ஆண்டே 50 பேர் முன்வந்தால் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 189, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

189--

கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் காளான் வளர்ப்புப் பயிற்சி அளித்தல்.

*22636-டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் காளான் வளர்ப்பு பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன வகைக் காளான்கள் வளர்க்க பயிற்சி அளிக்கப்படுகிறது?

(இ) இங்கு காளான் விதை உற்பத்தி செய்யப்படின், அவற்றை தமிழ்நாடு முழுவதும் வேளாண்மை அலுவலகங்களில் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிப்பிக்காளான் வளர்ப்பு பற்றிய பயிற்சி மட்டும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அளிக்கப்பட்டு வருகிறது.

(இ) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் காளான் விதைகள் தற்சமயம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படவில்லை என்பதால் தமிழ்நாடு முழுவதும் இந்த விதைகளை விநியோகிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான் என்பது ஏழையெளிய மக்களின் மாமிச உணவு என்பதுதான் அதற்கு சரியான பொருளாகும். ஒரு குழந்தையின் வளர்ப்புக்கு easily digestable proteins மற்றும் குழந்தையின் வளர்ப்புக்கு வேண்டிய